**தலைப்பு 259 – மாத்தளை மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை 2018 ஆம் ஆண்டு**

---

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று என்பன மாத்தளை மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148இ 149இ 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கு

**1.3 கணக்காய்வு விடயவெல்லை**

---

தலைப்பு 259 – மாத்தளை மாவட்ட செயலகத்தின் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவினம் அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதி மாத்தளை மாவட்ட செயலாளரிடம் வழங்கப்பட்டது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள

முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்பு**

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக மாத்தளை மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விபரமாக காட்டப்பட்டுள்ளது. அந்த அவதானிப்புகளில் போதியளவு மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகளை, இவ்வறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.18 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| **நிதி ஒழுங்குவிதி 128 (1) பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை** | | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை** | **அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர்** |
|---|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | | |
| 128(1)(அ) | அனுமதித்த முயற்சிகளுக்கு நிதி ஏற்பாடு அளிக்கையில் பாராளுமன்றத்துக்கு இருந்த எண்ணங்களுக்கும் அரசாங்க கொள்கைக்கும் மதிப்புக் கொடுத்து அவரின் திணைக்கள வேலைகள் திட்டமிடப்பட்டு உரிய காலத்தில் நிறைவேற்றப்படுகின்றன எனவும், அவ்வாண்டுக்கென விதிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அல்லது குறிப்பிட்டுள்ள இலக்கை எய்துவதற்கும் அல்லது இவ்விரண்டிற்கும் முயற்சி செய்யப்படுகின்றதெனவும் | 1. | செயற்றிட்டம் சரியாக தயாரிக்கப்படாமை | 2.1.1 (ஆ) |
| | | 2. | கருத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் | 2.1.2(அ) |
| | | 3. | பணம் விடுவிக்கப்பட்டிருப்பினும், முன்னேற்றம் அடையாத கருத்திட்டங்கள் | 2.1.2.( ஆ) |
| | | 4. | பெறுகை செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட குறைப்பாடுகள் | 2.2.2 (அ),(ஆ) (இ) (ஈ) |
| 128(1)(இ) | அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளையும் பிற குறைநிரப்பு அறிவுறுத்துரைகளையும் தனது திணைக்களம் கடைபிடிக்கின்றதெனவும், தேவையான விடயத்தில் அவை திணைக்கள அறிவுறுத்துரைகளால் குறைநிரப்பப்படுகின்றனவெனவும் | 1. | நிமித்த உப கட்டுநிதி தீர்ப்பதில் காணப்பட்ட தாமதங்கள் | 2.12 |
| | | 2. | பொது வைப்புக் கணக்கில் குறைப்பாடுகள் | 2.13 |
| | | 3. | ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் என்பன பேணப்படாமை | 2.14 |
| | | 4. | இணங்கியொழுகாமை | 2.15 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு அத்துடன் மற்றும் விடயங்கள் பற்றி போதிய உள்ளகக் கண்காணிப்பு பேணப்படுவதுடன், காலத்துக்குக் காலம் பரிசீலிக்கப்படுகின்றதெனவும் | அரசாங்க அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்ட குறைப்பாடுகள் | 2.11 |
| 128(1)(உ) | அரசாங்கத்துக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுக்காப்பிலுள்ள பணம், பண்டங்கள், சாதனங்கள் பிற சொத்துக்கள் ஆகியவற்றைப் பாதுகாத்துப் பேணுவதற்கு போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றனவெனவும், இவை காலத்துக்குக் காலம் சரிபார்க்கப்படுகின்றவெனவும், இவை தீர்வு செய்யப்படும்போது, அத்தகைய தீர்வு செய்தல் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கவுள்ளனவெனவும். | 1. சொத்துக்களை அட்டவணைப்படுத்தல் | 2.3 (அ) |
| | | 2. சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை | 2.3 (ஆ) |
| | | 3. வாகனங்களின் உரிமையை கையேற்கப்படாமை | 2.3 (ஈ) |
| | | 4. அரசாங்க சொத்துக்களின் துஷ்பிரயோகம் | 2.3(உ) |
| | | 5. செயலற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள் | 2.3(ஊ) |
| | | 6. வருடாந்த பொருட் மீளாய்வினை நடாத்துவதில் காணப்படும் குறைப்பாடுகள் | 2.3(எ) |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது திறைசேரியால் கேட்கப்படும் அத்தகைய தகவல், கூற்றுகள், விவர அறிக்கைகள் ஆகியன சரியாகவும், உடனடியாகவும் கொடுக்கப்படுகின்றனவெனவும். | 1. பாரப்படுத்தல்களும் பொறுப்புகளும் | 2.4 |
| | | 2. வரவு செலவு மதிப்பீடுகளை இயல்பான முறையில் தயாரிக்கப்படாமை | 2.10(அ)<br>2.3.(ஆ)ஐ |
| | | 3. வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தாமதப்படுத்தி சமர்ப்பித்தல். | 2.1.3 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளனவெனவும், அத்தகைய வேலைக்கென ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் நிலுவைகள் சம்பந்தமாகவும் அவைகளை விரைவில் அறவிடுவதற்கு எடுத்த நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் காலாண்டுக்கொருமுறையாவது அல்லது வேறு வழியில் பணிக்கப்பட்டவாறு தனக்கு அறிவிக்கின்றார்கள் எனவும், | அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கில் நிலுவை கடன் மீதி அறவிடுதல் | 2.11(அ) |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்களின் கொடுக்கல்வாங்கலில் எதிர்பார்க்கப்படும் சிக்கனம், திறமை, | 1. முறையற்ற கொடுக்கல் வாங்கல் | 2.5 |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒழுக்கமுடமை, நேர்மை ஆகியவற்றிற்கு உரிய மதிப்புக் கொடுத்துத் தனது திணைக்கள முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவெனவும், | 2. | முகாமைத்துவ குறைப்பாடுகள் | 2.9 |
| | | 3. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றால் வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் உபயோகத்தில் ஏற்பட்டுள்ள குறைப்பாடுகள் | 2.10(ஆ)(II) |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத் தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது எனவும், | | ஒதுக்கீட்டு கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைப்பாடுகள் | 2.10(ஆ) |
| 128(1)(ங) | பிணை கட்டுவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர்கள் நடைமுறையிலுள்ள கட்டளைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்குமிணங்க அவ்வாறு செய்கின்றனர் எனவும், | | சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் பிணை பெற்றுக்கொள்வதில் உள்ள குறைப்பாடுகள் | 2.17 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களது.'. பணியாளர்களது தாமதம், கவனையீனம், தவறு மற்றும் மோசடி காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 103 தொடக்கம் 108 வரையிலான ஒழுங்குவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிக் கோவையை கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் கடைபிடிக்கப்பட்டு நிதி ஒழங்குவிதிகள் 156(1) இன் பிரகாரம் அத்தகைய இழப்புகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்/பணியாளர்கள் மீது மிகை விதிப்பு விதிப்பதற்கும், | 1. | நிதி முறைகேடுகள் தன்மையிலான கொடுக்கல் வாங்கல் | 2.6 |
| | | 2. | சேதங்கள் தொடர்பான பொறுப்பு | 2.7 |

## 2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான கடமைப் பொறுப்புகள்

(அ) பிரதேச நிருவாக நடவடிக்கைகளை கூட்டிணைத்து மாவட்ட நிருவாக நடவடிக்கைகளை வழிநடாத்தல்

(ஆ) பிரதேச செயலகங்களுக்கு தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்கி சிறந்த நிதி முகாமைத்துவத்தை பேணுதல்.

(இ) பிரதேச மட்டத்தில் மேற்கொள்கின்ற எல்லா திட்டமிடல் நடவடிக்கைகளையும் கூட்டிணைத்தல் மற்றும் அவற்றின் முன்னேற்ற நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(ஈ) மாவட்ட நிருவாக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய எல்லா அலுவலர்களதும் மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(ஈ) மாவட்டத்தின் மக்களது வாழ்வாதார அபிவிருத்திக்கான செயற்பாடுகளை கூட்டிணைத்தல் மற்றும் அவற்றின் முன்னேற்றத்தில் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(உ) மாவட்டத்தின் நிருவாக நடவடிக்கைகளை வலுவூட்டல் பொருட்டு மூலதன முதலீடுகளுக்கு ஏற்புடையதான எல்லா நிருமாணிப்பு நடவடிக்கைகளையும் திட்டமிடல் மற்றும் அவற்றை கண்காணித்தல்.

(எ) மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைகள் மற்றும் சுற்றாடல் நடவடிக்கைகள் என்பவற்றை கூட்டிணைத்தல் மற்றும் அதனைச் சார்ந்துள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(ஏ) மாவட்டத்தில் ஆன்மிக அபிவிருத்தி மற்றும் இனங்களுக்கிடையில் நட்புறவை ஏற்படுத்தவதற்கு தேவையான நடவடிக்கைகளை வழிநடாத்தல்.

(ஐ) காணி பிரச்சினைகளுக்கு ஏற்புடையதான கூட்டிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(ஒ) சுடுபடைக் கலன்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் வெடி மருந்து பொருட்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைகள்

(ஓ) மாவட்டத்தின் தகவல்களை தயாரித்தல்.

ஔ) மாவட்டத்தின் தொழில்முயற்சி அபிவிருத்திக்கு ஏற்புடையதான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

## 2.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்களும் அவற்றின்மூலம் நிறைவேற்றப்படுகின்ற கடமைப்பொறுப்புகளும்.

---

மாவட்ட செயலகத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்களும் அவற்றின் கடமைப்பொறுப்புகளும் பின்வருமாறாகும்

| மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் | தாபிக்கும் அதிகாரம் | கடமைப் பொறுப்புகள் |
|---|---|---|
| (i) மாத்தளை பிரதேச செயலகம்<br>(ii) உக்குவளை பிரதேச செயலகம்<br>(iii) நாஉல பிரதேச செயலகம்<br>(iv) தம்புள்ள பிரதேச செயலகம்<br>(v) பல்லேபொல பிரதேச செயலகம்<br>(vi) ரத்தோட்டை பிரதேச் செயலகம்<br>(vii) அம்பன்கங்க கோரளை பிரதேச செயலகம்<br>(viii) லக்கல – பல்லேகம பிரதேச செயலகம்<br>(ix) வில்கமுவ பிரதேச செயலகம் | 1992 ஆம் ஆண்டு 58 ஆம் இலக்க பிரதேச செயலகங்களை தாபிக்கும் சட்டம் | மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளில் கையளிக்கப்படும் நிருவாக மற்றும் அபிவிருத்தி கடமைப் பொறுப்புகளை பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்தல் |

(x) யட்டவத்த பிரதேச செயலகம்

(xi) கலேவல பிரதேச செயலகம்

**2.3 செயலாற்றுகை**

**2.3.1 திட்டமிடல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வில்கமுவ மற்றும் ரத்தோட்டை பிரதேச செயலகங்களால் மீளாய்விற்கான ஆண்டுக்கான செயற்றிட்டம் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கருத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

உக்குவளை பிரதேச செயலகத்தால் 2014 ஆம் ஆண்டில் பிரண்டிகல தாவரவியல் பூங்காவை நிருமாணிக்கும் பொருட்டு கிடைக்கப்பெற்ற முழுமையான ஒதுக்கீடுகளையும் பயன்படுத்தாது, மதிப்பிடப்பட்ட செலவு 3.65 மில்லியன் ரூபாவை கலஉடஹேன மாணிக்காவத்த வீதியில், பாலத்தின் எஞ்சிய பகுதியை நிருமாணிக்கும் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு 2017 ஆம் ஆண்டில் 2017 தீர்மானிக்கப்பட்டிருப்பினும், அது மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை.

**(ஆ) நிதி விடுவிக்கப்பட்டிருப்பினும் முன்னேற்றம் அடையாதிருந்த கருத்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தம்புள்ள பிரதேச செயலகத்தால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குரிய ஒரு கருத்திட்டத்தின் பொருட்டும், இலங்கை மின்சார சபைக்குரிய 06 கருத்திட்டங்களின் பொருட்டும் ஒழுங்குமுறையாக ரூபா 557,980 ம் மற்றும் ரூபா 1,283,286 ம் என்ற வகையில் மொத்தம் ரூபா 1,841,266 ஆன தொகை விடுவிக்கப்பட்டிருப்பினும், அந்தக் கருத்திட்டங்கள் முடிவுறுத்தப்படவில்லை.

(ii) வில்கமுவ, கலேவல, யட்டவத்தை, அம்பன்கங்க கோரளை, லக்கல பல்லேகம, ரத்தோட்டை, நாஉல, பல்லேபொல மற்றும் உக்குவளை ஆகிய 09 பிரதேச பிரதேச செயலகங்களால் மீளாய்விற்கான ஆண்டில் 87 காசோலைகள்மூலம் 8.33 மில்லியன் ரூபா பெறுமதியிலான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்டிருப்பினும், அதற்கு ஏற்புடையதான பொருட்கள் மற்றும் சேவை வழங்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

2002 ஆம் ஆண்டு செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் மாவட்ட செயலகத்தால், நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்விற்கான ஆண்டுக்கு எற்புடையதாக செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அந்த அறிக்கை 2018 ஆம் ஆண்டு 14 ஆந் திகதியிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.4 பெறுகை நடைமுறைமூலம் வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல்

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றிடம் மீளாய்விற்கான ஆண்டில் பெறுகை நடைமுறைமூலம் வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு 302 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் 208.19 மில்லியன் ரூபா மட்டும் உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி 93.81 மில்லியன் ரூபா அல்லது ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளில் நூற்றுக்கு 31 வீதம் எஞ்சியிருந்தது.

### 2.4.1 பெறுகைகளை திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பெறுகை திட்டமிடல் மற்றும் ஆரம்ப கட்டம்**

2014 ஆம் ஆண்டு பெப்ருவரி 17 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் வில்கமுவ, யட்டவத்தை, உக்குவளை, ரத்தோட்டை, பல்லேபொல, நாஉல மற்றும் தம்புள்ளை பிரதேச செயலகங்களால் 2017 ஆம் ஆண்டுக்காக வருடாந்த பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 பெறுகை நடைமுறையினை செயற்படுத்தல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 6.3.6 வழிகாட்டலின்படி விலை கணக்குகளை திறத்தல் தொடர்பான செயற்பாடுகளை உரிய படிவத்தில் பதவு செய்தல் வேண்டுமென்பதுடன், அந்த அறிக்கைகளை விலை கேள்விகள் திறக்கும் குழுவின் எல்லா உறுப்பினர்களாலும் கையொப்பமிட வேண்டும். வில்கமுவ பிரசேத செயலகத்தில் அவ்வாறான அறிக்கை பேணப்படவில்லை.

(ஆ) அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் தம்புள்ள தம்மென்னா எல விரிவுபடுத்தல் மற்றும் கரையோர சுவர் நிருமாணிக்கும் பொருட்டு, 08 கைத்தொழில்களின் உடன்படிக்கை தொகை 25.1 மில்லியன் ரூபா ஆவதுடன், அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 4.3.1 வழிகாட்டலின்படி மொத்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 7.9.11 வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தம் வழங்குவதற்கு முன் ஒவ்வொரு வகையீடுகளின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலை கணக்குகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி இயல்பான நிலைக்கு புறம்பான வகையில் குறைந்த பொதுநிலை அளவுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலை கணக்குகளுக்கு, அவர்கள் அந்த வேலையினை மேற்கொள்வார்களா என்பது தொடர்பாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமாயினும், தம்புள்ள வெள்ளப்பெருக்கு இடர்களை குறைத்துக்கொள்ளும் கருத்திட்டத்தின் 9.11 மற்றும் 12 இற்கு ஏற்புடையதான மதிப்பீடுகளிலும் ஒப்பந்தக்காரர்களின் விலை கணக்குகளுக்குமிடையில் நூற்றுக்கு 25 தொடக்கம் நூற்றுக்க 78 வரையிலான விலை பொதுநிலை அளவுகளில் ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டன.

(ஈ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 7.10.1 இன் வழிகாட்டலின் பிரகாரம், பின் தகைமை பரிசோதனை மேற்கொண்டு விலை கேள்வி மதிப்பிட வேண்டுமாயினும், 25.1 மில்லியன் ரூபா பெறுமதியான தம்புள்ள வெள்ளப்பெருக்கு அனர்த்த நிலைமையை குறைக்கும் கருத்திட்டம் தொடர்பாக ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்கையில் அவ்வாறான மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை.

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் குறைப்பாடுகள் அறியவந்தன.

### (அ) சொத்துக்களை அட்டவணைப்படுத்தல்

யட்டவத்தை பிரதேச செயலகத்திற்குரிய அரசாங்க குடிமனைகளுக்கு ஏற்புடையதாக வெவ்வேறாக கடிதக்கோவைகள், மின்சார உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருட் பதிவேடு அட்டவணைகளை பேணிச் செல்லப்படவில்லை.

### (ஆ) சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

நாஉல பிரதேச செயலகத்தின் களஞ்சியம், இளைஞர் சேவைகள் கட்டிடம் மற்றும் மொரகஹகந்த கருத்திட்ட அலுவலகத்திற்கு அண்மித்துள்ள ஊர்திச்சாலையில் பழுதபார்க்க இயன்ற நிலையிலுள்ள பொருட்கள் மற்றும் பயன்படுத்தாத பொருட்கள் பாதுகாப்பின்றி வைக்கப்பட்டிருந்தன.

### (இ) நிதி மற்றும் தொழிற்பாட்டு குத்தகை முறையின் கீழுள்ள வாகனங்களின் பயன்பாடு

2010 ஆம் ஆண்டு திசெம்பர் 07 ஆந் திகதிய வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 150 இன்கீழ் 2011 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் நிதி மற்றும் தொழிற்பாட்டு குத்தகை முறையின் கீழ் மாத்தளை மாவட்ட செயலகத்திடம் வழங்கப்பட்டிருந்த ரூபா 67,200,000 பெறுமதியான 12 வாகனங்களுக்கு ஏற்புயைடதாக குத்தகை தவணை தொகயினை மீளாய்விற்கான ஆண்டில் செலுத்தி முடிவுறுத்திருப்பினும் வாகனங்களின் உரிமையை மாவட்ட செயலகத்திடம் கையகப்படுத்தியிருக்கவில்லை.

### (இ) அரசாங்க சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல்.

தம்புள்ள மற்றும் உக்குவளை பிரதேச செயலகங்களுக்கு ஏற்புடையதாக ஒழுங்குமுறையில் அத்துமீறல் 03 காணித் துண்டுகளும், 296 என்ற வகையில் மொத்தம் 299 காணித் துண்டுகளை ஒழுங்குபடுத்தலுக்கோ மீண்டும் கையகப்படுத்தலுக்கோ தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

### (ஈ) செயலற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்.

பின்குறிப்பிடப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் செயலற்று இருந்தமை மாதிரி கணக்காய்வு பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | செயலற்று இருந்த காலம் |
|---|---|---|---|---|
| (i) | கட்டிடங்கள் | 02 | மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 1 ஆண்டுக்கும் 3 ஆண்டுகளுக்குமிடையில் |
| | | | | |
| (ii) | இயந்திரங்கள் | 05 | -அதே- | -அதே- |

**(உ) வருடாந்த பொருட் மீளாய்வினை நடாத்தல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 இலக்கம் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையில் 3.2.6 பந்தி பிரகாரம் மாவட்ட செயலகத்தால் 2017 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான பொருட் மீளாய்வு அறிக்கைகள் 2018 ஆம் அண்டு யூன் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2018 ஆம் ஆண்டு 30 ஆந் திகதியிலும் அவ்வறிக்கைகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 பாரப்படுத்தல்களும் பொறுப்புகளும்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த வரவு செலவு எல்லையை கடந்து பாரப்படுத்தல்களை மேற்கொள்ளுதல்**

2017 ஏப்பிரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையில் 02(அ) பந்திக்கு இணங்கியொழுகாது 11 செலவு விடயங்களின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 257 மில்லியன் ரூபா ஒதுக்கீடுகளை 2.2 மில்லியன் ரூபாவை விஞ்சி பாரப்படுத்தல்களை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) வெளிப்படுத்தியிருக்காத பொறுப்புகள்**

மாவட்ட செயலகத்திலும் 08 பிரதேச செயலகங்களிலும் 735,125 மில்லியன் ரூபாவிலான பொறுப்புகளை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**2.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்**

மாவட்ட செயலகத்தால் மேற்கொண்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்று காணப்பட்டது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான பல சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

(அ) பல்லேபொல பிரதேச செயலகத்தால் 03 ‘‘நில செவன’’ கட்டிடங்களை நிருமாணிக்கும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 3.63 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடுகளிலிருந்து 3.59 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு 02 கட்டிடங்கள் மட்டும் நிருமாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரத்தோட்டை பிரதேச செயலகத்தால் கருப்பு பட்டியலிடப்பட வேண்டிய ஒப்பந்தக்காரரொருவருக்கு 5.84 மில்லியன் ரூபா பெறுமதியிலான 14 கருத்திட்டங்கள் அளிக்கப்பட்டிருந்தன.

(இ) விலகமுவ பிரதேச செயலகத்தால் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்கு இரண்டு தணியார் நிறுவனங்களிடம் அனுப்பாணை வழங்கப்பட்டு, அந்த இரண்டு கட்டளைகளுக்கும் ஏற்புடையதான ரூபா.74,280 பெறுமதியிலான தொகையை அந்த ஒரு நிறுவனத்திடம் செலுத்தப்பட்டிருந்தது.

**2.8 நிதி முறைகேடுகள் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்**

மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட மோசடி தன்மையிலான கொடுக்கல்வாங்கல் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

(அ) வில்கமுவ பிரதேச செயலகத்தில் பயன்படுத்தப்படும் 02 வாகனங்கள், ஓடிய தூரத்திற்கு தேவையான எரிபொருள் தேவையினை கடந்து ரூபா. 113,662 பெறுமதியில் எரிபொருள் அதிகமாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கலேவல பிரதேச செயலகம் மற்றும் படகஹவத்தை வீதியில் முரடான கற்கள் பதித்த வீதியின் இரு பக்கமாகவும் கொன்கிரீட் இடும்போது, நிறைவேற்றப்படாத கொன்கிரீட் வேலைகளின் பொருட்டு ரூபா. 78,289 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கலேவல பிரதேச செயலகத்தில் பெலியகந்த கூட்டு பண்ணை வீதியை முரடான கற்கள் பதிக்கும் தொழிலில், உடன்படிக்கை மேற்கொண்ட மதிப்பீட்டு ஆலோசனைகள் பிரகாரம் ABC கலவையினை பதிக்கப்பட்டு செப்பணிடாது, வீதியின் இரு பக்கமும் கொன்கிரீட் கலவையின் குறைப்பாடுகள் காரணமாக, அதன் பொருட்டு பயன்படுத்திய அளவுறு பலகைகள் பயனற்ற செலவாகியதால், ரூபா. 405,058 அதிகமான செலுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.9 சேதங்கள் தொடர்பான பொறுப்பு**

கடந்த ஆண்டில் மாவட்ட செயலகத்தில் காணமல்போன லெப்டொப் கணினியில் ரூபா.88,665 ஆன நட்டமும், யட்டவத்தை பிரதேச செயலகத்தில் காணமல்போன லெப்டொப் கணினியின் திணைக்களத்து கட்டணங்களும் அடங்கலாக ரூபா.70,000 ஆன நட்டமும், அதற்கு பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்களிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**2.10 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்**

மாவட்ட செயலகங்களுக்கு ஏற்புடையதாக கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த, கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காட்டிய குறைப்பாடுகள் தொடர்பில் அமைச்சு சரி செய்யப்படவில்லையென்பதுடன், பந்திகளுக்கான தொடர்கள் பின்வருமாறாகும்.

| கணக்காய்வு அதிபதி அறிக்கையின் தொடர்கள் | | சம்பந்தப்பட்ட விடயம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | | |
| 2007<br>2008 | 7.5 (அ)<br>7.4 (இ) | கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட குறைப்பாடுகள்<br><br>சட்டங்கள் விதிகள் மற்றும் ஒழுங்குவிதி என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை | எட்டவராஹேன சனசமூக மண்டபத்தை நிருமாணிக்கும் குறைப்பாடுகள்<br>(i). வரவு செலவு சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு முரணாக பொருட்களை கொள்வனவு செய்தல்<br>(ii). தேசத்தை கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு முரணாக செலவிடல்<br>(iii). அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு முரணாக மேலதிகப் படி மற்றும் லீவு நாட் சம்பளம் செலுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| 2010<br>2012<br>2014<br>2015<br>2015 | 4.10 (அ)<br>1.7<br>3.5<br>3.6 (ஆ)<br>3.6<br>3.12(ஈ) | | வில்கமுவ பத்கம்பல அரிசி தயாரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்படாமை மற்றும் அதன் சொத்துக்கள் செயலற்று இருத்தல், அதற்காக செலவிடப்பட்ட தொகை பயனற்று இருத்தல்.<br><br>(அ) செயலற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்<br>(ஆ) நாஉல புடவைக் கைத்தொழில் நிலையம் ஆரம்பிக்கப்படாமை<br>(இ) நாஉல நீர் கருத்திட்டத்திற்கு உரிய, நீர் மோட்டரை வெளியக தரப்புகளிடம் வழங்குதல்<br>(ஈ) அன்பளிப்பாக கிடைக்கப்பெற்ற சொத்துக்களை கணக்கில் வைக்காமை.<br>ரிட்டிகல வாய்க்கால் மற்றும் நீர் கருத்திட்டம் பொருட்டு செலவிடப்பட்ட தொகை பயனற்று இருத்தல் |
| | 3.9(அ)(i) | பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள் | வில்கமுவ கலாச்சார நிலையத்தை உபயோகப்படுத்தாமல் பயனற்று இருத்தல் |
| 2016 | 3.2.2 (அ), (ஈ), (உ), (ஊ), (ஏ), (ஒ), (ஓ), (க), (ங) | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கிய ஒதுக்கீடுகளை பயன்படுத்தும் போது ஏற்பட்ட குறைப்பாடுகள் | (அ) மூலதன செலவு விடயங்கள் 08 இல் 135 மில்லியன் ஒதுக்கீடுகள் எஞ்சியிருத்தல்<br>(ஈ) ஹபரகட புடவைக் தைத்தொழில் நிலையம் செயலற்று இருத்தல்.<br>(உ) ஹபரகட புடவைக் தைத்தொழில் நிலையத்திற்கு கொள்வனவு செய்த மூலப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பயனற்று இருத்தல்.<br>(ஊ) காணி சுவீகரிக்கப்படாது தம்புள்ள ரீ.பி.தொன்னகோன் கலாச்சார நிலையத்தை நிருமாணித்தல்<br>(ஏ) நாஉல லிஹினிபிட்டிய நீர் திட்டத்தில் நீர் குழாய்களை பொருத்துவதில் ஏற்பட்ட குறைப்பாடுகள் காணரமாக கருத்திட்டம் வெற்றியடாமை<br>(ஒ) உக்குவளை எல்கடுவ நகரத்தின் |

| | | |
|---|---|---|
| | | விளையாட்டு மைதானத்தை நிருமாணிப்பதில் காணப்படும் குறைப்பாடுகள்<br>(ஓ) உக்குவளை உடங்கமுவ சனசமூக மண்டபத்திற்கு எஞ்சிய ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாமை காரணமாக மேற்கொண்ட செலவு பயனற்றுவிடுதல்<br>(க) நாஉல ஓபல்கம நீர் திட்டம் வெற்றியளிக்காமை<br>(ங) நாஉல மொரகஹமட நீர் திட்டம் வெற்றியளிக்காமை |
| 3.7 (அ)(ஆ) | கருத்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடப்படுதல் கருத்திட்டங்களை முடிவுறுத்தாது கைவிடப்படுதல் | (அ) கலேவல கந்தன்கமுவ பாடசாலை மாவத்தை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம்<br>(ஆ) மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களால் 11 கருத்திட்டங்களை முடிவுறுத்தாது கைவிடப்படுதல் |
| 3.8(அ) (ii)(ஆ) | போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்<br>திட்டமிடல் | (அ) ரத்தோட்டை பிரதேச செயலக நிலத்தில் வேலி நிருமாணிப்பதில் காணப்பட்ட குறைப்பாடுகள்<br>(ஆ) மாவட்ட செயலகங்களின் செயற்றிட்டம்படி கருத்திட்டங்களை நிறைவேற்றப்படாமை. |
| 3.10 (அ),(ஆ) | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் நடைமுறையினை பின்பற்றப்படாமை | (அ) விலை கோருவதற்காக போதியளவு காலம் வழங்கப்படாமை<br>(ஆ) 04 பிரதேச செயலகங்களால் விலை கேள்விகளை பதிவு தபாலில் பெறப்படாமை |
| 3.11 (அ) | நட்டங்கள் மற்றும் சேதங்கள் | மாவட்ட செயலகத்திலும் யட்டவத்த பிரதேச செயலகத்திலும் அலுவலர்களிடம் வழங்கப்பட்ட லெப்டொப், கணினி மற்றும் டெப் இயந்திரங்கள் காணமல்போதல் |
| 3.14 (அ) | முகாமைத்துவ | அரசாங்கத்தின் அபிவிருத்தி |

| | | |
|---|---|---|
| | குறைப்பாடுகள் | நடவடிக்கைகளின் பொருட்டு காணிகளை கையேற்கப்படாத 54 சந்தர்ப்பங்களில், 02 ஆண்டுகள் தொடக்கம் 35 ஆண்டுகள் வரை தாமதமடைதல் |

**2.11 முகாமைத்துவ குறைப்பாடுகள்**

-----------------------------------------

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின்போது பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கையொப்பமிட்டு பகிர்ந்தளிப்பதற்கு தயாராகவிருந்த 12 அளிப்புப் பத்திரங்களை, 21 – 35 ஆண்டு காலவெல்லைக்குள் பகிர்ந்தளிக்காது, உக்குவளை பிரதேச செலகத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பல்லேபொல பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி பிரேரணை ஒதுக்கீட்டின்கீழ் 12 சந்தர்ப்பங்களுக்கு ஏற்புடையதாக வழங்கிய ரூபா. 408,000 பெறுமதியான உபகரணங்களை, ஒரே நிறுவனங்களுக்கும் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது.

(இ) பல்லேபொல பிரதேச செயலகத்தில் பதிவு செய்து, முனைப்பாக செயற்படாத 15 சங்கங்களின் பொருட்டு ரூபா. 327,000 ஆன பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஈ) மாவட்ட செயலகம் மற்றும் 6 பிரதேச செயலகங்களால் 14.34 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக எழுதப்பட்ட 126 காசோலைகள் பெறுநர்களிடத்தில் கையளிக்கப்படாதிருந்தன. அவை மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கொடுப்பனவு வவுச்சர்களை கணக்காய்விடம் சமர்ப்பிக்காமை காரணமாக, பல்லேபொல பிரதேச செயலகத்தின் மொத்தம் ரூபா 659,748 ஏற்புடையதான 03 கொடுக்கல் வாங்கல்கள் திருப்திகரமாக அவதானிக்கப்பட முடியவில்லை.

(ஊ) மாவட்ட செயலகத்திடம் மீளாய்விற்கான ஆண்டில் வழங்கப்பட்ட 09 கணக்காய்வு உசாவுதல்களுக்கும், கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட 02 கணக்காய்வு உசாவுதல்களுக்கம், 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆந் திகதியிலும் பதில் சமர்ப்பிக்கப்படவில்லையென்பதுடன். அந்த உசாவுதல்களுக்கு ஏற்புடையதாக கணக்கிட முடியுமான கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி 3,042.35 மில்லியன் ரூபாவாகும்.

**2.12 கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தல்**

-----------------------------------------

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 அந் திகதியுடன் முடிவடையும் 05 ஆண்டு காலப்பகுதிக்கு, மாவட்ட செயலகம் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடு, உபயோகம் மற்றும் மிகுதி தொடர்பான தகவல்கள்களும், அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகளும் பின்வருமாறாகும்.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஒதுக்கீடு | உபயோகம் | மிகுதி ரூபா.மில் | மிகுதி தேறிய ஒதுக்கீட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| ------- | --------- | -------------- | -------------- | ------------- | ------- |
| 2013 | மீண்டுவருஞ் | 436.83 | 435. 06 | 1.77 | 0.41 |
| | மூலதனம் | 50.25 | 47.76 | 2.49 | 4.96 |
| | **மொத்தம்** | **487.08** | **482.82** | **4.26** | 0.87 |
| 2014 | மீண்டுவருஞ் | 429.58 | 429.48 | 0.10 | 0.02 |
| | மூலதனம் | 51.25 | 50.29 | 0.96 | 1.87 |
| | **மொத்தம்** | **480.83** | **479.77** | **1.06** | 0.22 |
| 2015 | மீண்டுவருஞ் | 556.15 | 552.48 | 3.67 | 0.66 |
| | மூலதனம் | 212.00 | 69.96 | 142.04 | 67.00 |
| | **மொத்தம்** | **768.15** | **622.44** | **145.71** | 18.97 |
| 2016 | மீண்டுவருஞ் | 584.20 | 579.23 | 4.97 | 0.85 |
| | மூலதனம் | 296.00 | 205.56 | 90.44 | 30.55 |
| | **மொத்தம்** | **880.20** | **784.79** | **95.41** | 10.83 |
| 2017 | மீண்டுவருஞ் | 583.69 | 577.20 | 6.49 | 1.11 |
| | மூலதனம் | 302.00 | 208.19 | 93.81 | 31.06 |
| | **மொத்தம்** | **885.69** | **785.39** | **100.30** | **11.32** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வரவு செலவு மதிப்பீடு தயாரித்தல்**

மாவட்ட செயலகத்திற்கு ஏற்புடையதான கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு தேவையான ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்வதற்கு, தயாரிக்கப்பட்டிருந்த வரவு செலவு மதிப்பீடு இயல்பான முறையில் தயாரிக்கப்படாமை காரணமாக குறைநிரப்பு மதிப்பீடு மூலம் 02 செலவு விடயங்களின் பொருட்டு 14.30 மில்லியன் ரூபா மேலதிக ஒதுக்கீடுகளாக ஏற்பாடு செய்து கொள்வதற்கும், நிதி ஒழுங்குவிதி 66 மூலம் 17 செலவு விடயங்களின் பொருட்டு 33.55 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடுகளை குறைக்கப்பட்டு 11 செலவு விடயங்களின் பொருட்டு ஒதுக்கீடுகளை அதிகரித்துக்கொள்வதற்கும் வேண்டிய நிலை ஏற்பட்டது.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). 03 பிரதேச செயலகங்களுக்கு வழங்கியிருந்த ஒதுக்கீடுகளை கடந்து செலவு விடய இலக்கம் 2102 மற்றும் 2103 இன் கீழ் ரூபா.1,419,887 ஆன சொத்துக்களை கையேற்கப்பட்டிருந்தது.

(ii). 05 பிரதேச செயலகங்களால் சொத்துக்களை கையேற்கும்போது மேற்கொண்ட செலவு, ஒதுக்கீட்டுக் கணக்கில் செலவு விடய இலக்கம் 2012 இல் ரூபா.1,081,164 ஆல் அதிகரித்தும், விடய இலக்கம் 2103 இல் ரூபா.2,285,552 ஆல் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(iii). மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களில் ஏலப் பெறுமதி ரூபா. 71,465 ஆன, 162 பொருட் வகையீடுகளில், 639 அலகுகள் மற்றும்

ஏலமிடப்பட்டிருந்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா. 16,896 ஆன 26 பொருட் வகைகள் தொடர்பில் ஒதுக்கீட்டுக் கணக்கில் சீராக்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

(iv). 09 செலவு விடயங்களின் பொருட்டு மிகை ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்தல் காணரமாக ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்திய பின்னர், மீதியானது, அந்த செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக தேறிய ஒதுக்கீடுகளிலிருந்து நூற்றுக்கு 06 தொடக்கம் நூற்றுக்கு 73 வரையிலான எல்லைக்குள் இருந்தது.

(v). 28 ஏனைய அமைச்சுக்கள், 20 திணைக்களங்கள் மற்றும் 2 அலுவலகங்களால் ஒழுங்கு முறையில் 1,893.72 மில்லியன் ரூபா, 211.55 மில்லியன் ரூபா, மற்றும் 27.1 மில்லியன் ரூபா என்ற வகையில் மொத்தம் 2,132.37 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டு முடிவடையும்போது அதில் மொத்தம் 1,909.39 மில்லியன் ரூபா மட்டும் உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளிலிருந்து 222.98 மில்லியன் ரூபா அதாவது நூற்றுக்கு 10.46 ஆன ஒதுக்கீடு எஞ்சியிருந்தது. அது தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் குறைப்பாடுகள் அறியவந்தன

- 30 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக பெற்றுக் கொள்ளப்பட்ட 147.66 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடுகள் ஏற்புடைய கடமைகளின் பொருட்டு பகிர்ந்தளிக்காது மாவட்ட செயலகத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

- ரத்தோட்டை மற்றும் யட்டவத்தை பிரதேச செயலகங்களின் பொருட்டு தேவையை மிஞ்சி ஒதுக்கீடுகளை வழங்கியதன் காரணமாக ஒழுங்கு முறையில் 0.5 மில்லியன் ரூபா மற்றும் 1.50 மில்லியன் ரூபா என்ற வகையில் மொத்தம் 02 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டு தொகை எஞ்சியிருந்தது.

**2.13 அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு**

---

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

---

மாவட்ட செயலகத்திற்கு ஏற்படையதாக விடய இலக்கம் 25901 இன் கீழ் அரசாங்க அலவலர்களுக்கு முற்பணக் கணக்கின் பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளும் உண்மையான பெறுமதிகளும் பின்வருமாறாகும்.

| **செலவு** | | **கிடைக்கப்பெறுதல்** | | **பற்று மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக்கூடிய எல்லை** | **உண்மையான** | **ஆகக்குறைந்த எல்லை** | **உண்மையான** | **ஆகக்கூடிய எல்லை** | **உண்மையான** |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன்ன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 60.00 | 59.44 | 33.00 | 33.78 | 170.00 | 155.76 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விடம் சமர்ப்பித்த கணக்கிணக்க கூற்று பிரகாரம் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 அந் திகதியில் அறவிடுதல்களில் நிலுவையாக இருந்த மீதிகளின் மொத்தம் ரூபா. 840,567 ஆனதுடன், அந்த நிலுவை மீதி ஓராண்டு தொடக்கம் 17 ஆண்டுகள் வரையிலான காலவெல்லையைக் கொண்டிருந்தது. அந்த நிலுவை கடன் மீதிகளை அறிவிடுதல் தொடர்பான பின்னாய்வு நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருந்தது.

(ஆ) மாவட்ட செயலகத்தால் பொருத்தமான பிணையாளர்களை சமர்ப்பிக்காதிருந்த 03 சந்தர்ப்பங்களில் ரூபா.449,530 தொகையும், பொது படிவம் 158 (அ) படிவம் பூர்த்தி செய்யப்படாத 06 சந்தர்ப்பங்களில் ரூபா.573,630 தொகையும் என்ற வகையில் மொத்தம் ரூபா. 1,023,160 தொகை இடர் கடனாக வழங்கப்பட்டிருந்தது.

(இ) மாவட்ட செயலகத்தால் தயாரிக்கப்பட்டிருந்த முற்பணக் கணக்கீட்டு கூற்றில் அமைச்சுக்களில்/ திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருந்தவர்களிடத்தில் அறவிடப்பட வேண்டிய மீதி பட்டியல் மற்றும் பிரதேச செயலகங்களில் முற்பணக் கணக்கில் அந்த மீதிகளுடன் ஒப்பிடுகையில் ரூபா.93,938 ஆன ஒப்பிடப்படாமை அவதானிக்கப்பட்டது.

## 2.14 கட்டுநிதி கணக்கு

2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க சுற்றுநிருபத்தால் திருத்தம் செய்யப்பட்ட நிதி ஒழுங்குவிதி 371(5) பிரகாரம் பணியை முடிவுறுத்தி 10 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டிய நிமித்த உப கட்டுநிதியை சீராக்கப்பட வேண்டுமாயினும், 4 பிரதேச செயலகங்களால் 72 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த மொத்தம் ரூபா.859,020 ஆன நிமித்த உப கட்டுநிதியை 12 நாட்கள் தொடக்கம் 115 நாட்கள் வரையிலான காலப் பகுதி தாமதமடைந்த பின்னர் சீராக்கப்பட்டிருந்தது.

## 2.15 பொது வைப்புக் கணக்கு

மாவட்ட செயலகத்தின்கீழ் 07 பொது வைப்புக் கணக்குகளில் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் திசெம்பர் 31 அந் திகதியில் மீதிகளின் மொத்தம் 224.67 மில்லியன் ரூபாவாக இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு ஆண்டுகள் கடந்த பின்னர் மொத்தம் ரூபா.1.4 மில்லியன் ரூபாவிலான 38 வைப்புகள் தொடர்பில் தம்புள்ளை, லக்கல, பல்லேகம மற்றும் கலேவல ஆகிய பிரதேச செயலகங்களால் நிதி ஒழுங்குவிதி 571 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) உணவு பாதுகாப்பு அமைச்சினால் 2014/2015 பெரும் போகத்தில் கொள்வனவு செய்வதற்கு வழங்கியிருந்த ரூபா.2.76 மில்லியன் ரூபாவிலான பணத் தொயில், உரிய கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றாது மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) உக்குவளை பிரசெத செயலகத்தின் 04 கரத்திட்டங்களுக்கு ஏற்புடையதாக ரூபா. 102,247 பெறுமதியிலான பிடிபணம் 02 நிதி ஆண்டுகளுக்கு அண்மித்த காலப் பகுதி விடுவிக்காது பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) வைப்புக் கணக்கில் நிச்சியமற்று வைத்துக்கொண்டுள்ள பணத் தொகை முதிர்வடைந்த வைப்புகளாக கருதப்படுவதற்கு இடமளிக்காது நிதி ஒழுங்குவிதி 571(3) பிரகாரம் பொருத்தமானவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், அம்பன்கங்க கோரளை மற்றும் உக்குவளை பிரதேச செயலகங்களால் 04 சந்தர்ப்பங்களுக்கு ஏற்பயைடதாக ரூபா.234,400 ஆன தொகையினை ஏற்புடைய நோக்கங்களின் பொருட்டு பயன்படுத்தாது, பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.16 ஆவணப் பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தால் பின்வரும் ஆவணங்கள் பேணியிருக்கவில்லையென்பதுடன், சில ஆவணங்களை முறையாகவும் இற்றைப்படுத்தி பேணப்படவில்லையென்பது மாதிரி கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | ஏற்புடைய ஒழுங்குவிதி | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களின் பதிவேடு | 1978 ஆம் ஆண்டு திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் /நிதி ஒழுங்குவிதி 502(2) பிரகாரம் அதில் 11 ஆவது பின்னிணைப்பு | அம்பன்கங்க கோரளை, ரத்தோட்டை மற்றும் வில்கமுவ பிரதேச செயலகங்களால் பேணிச்செல்லப்படவில்லை. |
| (ஆ) | கணினி துணைப் பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடரப்பாக நிலையான சொத்துக்களின் பதிவேடு | 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆந் திகதிய அய்ஏஅய்/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | அம்பன்கங்க கோரளை, நாஉல மற்றும் யட்டவத்தை பிரதேச செயலகங்களால் பேணிச்செல்லப்படவில்லை. |
| (இ) | இருப்பு புத்தகம் | நிதி ஒழுங்குவிதி 751 மற்றும் 763 | உக்குவளை, யட்டவத்தை மற்றும் நாஉல மற்றும் வில்கமுவ பிரதேச செயலகங்களால் இற்றைப்படுத்தி பேணிச்செல்லப்படவில்லை. |
| (ஈ) | உத்தியோகபூர்வ தொலைபேசி பதிவேடு | நிதி ஒழுங்குவிதி 845(1) பிரகாரம் 26 ஆவது பின்னிணைப்பு | யட்டவத்தை மற்றும் வில்கமுவ பிரதேச செயலகங்களால் பேணிச்செல்லப்படவில்லை. |
| ( உ) | பிணை பதிவேடு | நிதி ஒழுங்குவிதி 891 (1) | வில்கமுவ பிரதேச செயலகத்தால் பேணிச்செல்லப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதி ஒழுங்குவிதி 454(2) | உக்குவளை, நாஉல மற்றும் யட்டவத்தை ஆகிய பிரதேச செயலகங்களால் பேணிச்செல்லப்படவில்லை. |
| (எ) | பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | நிதி ஒழுங்குவிதி 214 | யட்டவத்தை, வில்கமுவ மற்றும் ரத்தோட்டை ஆகிய பிரதேச செயலகங்களால் பேணிச்செல்லப்படவில்லை. |
| (ஏ) | முற்பணப் பதிவேடு | 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையில் 05 ஆவது பந்தி | தம்புள்ளை பிரதேச செயலகத்தால் இற்றைப்படுத்தி பேணிச்செல்லப்படவில்லை. |
| (ஐ) | பெறுகை குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வரவு பதிவேடு | பெறுகை வழிகாட்டல் கோவையில் 2.11.1 வழிகாட்டல் | உக்குவளை வில்கமுவ மற்றும் ரத்தோட்டை ஆகிய பிரதேச செயலகங்களால் பேணிச்செல்லப்படவில்லை. |
| (ஐ) | விலைகோரல் மேற்கொள்ளும் பதிவேடு | அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையில் 5.2.1 வழிகாட்டல் | யட்டவத்தை வில்கமுவ மற்றும் ரத்தோட்டை ஆகிய பிரதேச செயலகங்களால் பேணிச்செல்லப்படவில்லை. |
| (ஓ) | லீவு தொடரப்பான பதிவேடு | தாபன விதிக்கோவையில் XII ஆவது அத்தியாயத்தில் 1.7 பிரிவு | உக்குவளை மற்றும் தம்புள்ளை ஆகிய பிரதேச செயலகங்களால் பேணிச்செல்லப்படவில்லை. |
| (ஓ) | காசோலை கையளிக்கும் பதிவேடு | நிதி ஒழுங்குவிதி 388 மற்றும் 389 | யட்டவத்தை பிரதேச செயலகத்தால் பேணிச்செல்லப்படவில்லை. |

## 2.17 இணங்கியொழுகாமை

### 2.17.1 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகாமை

மாதிரி கணக்காய்வு விசாரணைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர்பு | பெறுமதி | இணங்கியொழுகாமை |
|---|---|---|
| | ரூபா | |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை | | |
| நிதி ஒழுங்குவிதிகள் 11, 12 | 200,944 | 13 சந்தர்ப்பங்களில் யட்டவத்தை பிரதேச செயலகத்தால் மீண்டுவருஞ் செலவுகளை மேற்கொள்வதற்காக மூலதன ஒதுக்கீடுகளை பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| நிதி ஒழுங்குவிதிகள் 388 மற்றும் 389 | 21,184,756 | 06 பிரதேச செயலகங்களில் 127 சந்தர்ப்பங்களில் காசோலைகளை கையளிக்கும் பதிவேட்டில் காசோலை பெறுநர் அல்லது காசோலை வழங்கும் அலுவலர் கையொப்பமிடாது காசோலை வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) தேசிய வரவு செலவு சுற்றறிக்கை | | |
| 2016 ஆம் அண்டு சனவரி 06 ஆந் திகதிய பிபீ/ஜீபீஎஸ்/130 /9/14/எம்சீ-iii இலக்க சுற்றறிக்கை | 687,420 | i. உக்குவளை பிரதேச செயலகத்தால் களமல்லாத கடமைகளின் பொருட்டு விடுவிக்கப்பட்டிருந்த 06 அலுவலர்களின் பொருட்டு 2014 ஆம் ஆண்டில் வழங்கியிருந்த மோட்டார் சைக்கிள்களின் பொருட்டு அறவிடப்பட வேண்டிய பணத் தொகை அறவிடப்படவில்லை. |
| | 277,000 | ii. தம்புள்ள பிரதேச செயலகத்தில் கள அலுவல்கள் அல்லாத கடமைகளின் பொருட்டு விடுவிக்கப்பட்ட அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் சந்தைப் பெறுமதி தொகையை வரவு செலவுத் திணைக்களத்திடம் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை |
| (இ) மாத்தளை – மாவட்ட செயலாளரின் சுற்றறிக்கை | | |
| 2017 ஏப்பிரல் 01 ஆந் திகதிய மாசெய/05 /04/RIDP/2017 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 08 மற்றும் 04 ஆகிய பந்திகள் | | i. பல்லேபொல பிரதேச செயலகத்தில் வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தியிருந்த விலங்கு கட்டுப்பாட்டு கருத்திட்டமொன்று சுற்றுநிருப ஆலோசனைப்படி சுகாதார முறையில் |

நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை.

ii. பல்லேபொல பிரதேச செயலகத்தில் வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டத்தின்கீழ் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளில் உதவி பெறுவதற்கு பொருத்தமல்லாத 03 நபர்களின் பொருட்டு உதவி வழங்கப்பட்டிருந்தது.

**2.18 மனிதவள முகாமைத்துவம்**

**இணைக்கப்பட்டுள்ள பதவியணி, உண்மையான பதவியணி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகளின் பொருட்டான செலவு**

மேற்படி 2.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான மற்றும் வெற்றிடப் பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும். மீளாய்விற்கான ஆண்டின் பொருட்டு மாவட்ட செயலகத்தால் ஆளுக்குரிய வேதனாதிகளின் செலவு தொகுதி பொருட்டு 521.27 மில்லியன் ரூபா.செலவிடப்பட்டிருந்தது. அதன்படி தனி நபர் செலவு 322,967 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது.

| பதவியணி வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உண்மையான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 58 | 46 | 12 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 41 | 25 | 16 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 1,642 | 1,432 | 210 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 134 | 111 | 23 |
| | மொத்தம் | 1,875 | 1,614 | 261 |

மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 261 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**2.19 அரசாங்க அலுவலர்கள் பிணை வைத்தல்**

இலக்கம் ஈ92 /பிணை மற்றும் 1993 ஆம் ஆண்டு ஒக்டோபர் 07 ஆந் திகதிய, எல்லா பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் பிரகாரம், வில்கமுவ பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர், கணக்காளர், நிருவாக அலுவலர், பிரதான முகாமைத்துவ உதவியாளர், சாரதி, களஞ்சியக் காப்பாளர் மற்றும் கிளைத் தலைவர் (அபிவிருத்தி) ஆகிய 07 பதவிகளுக்குரிய, பிணை வைக்கப்பட வேண்டிய 08 அலுவலர்களால் வைக்கப்பட வேண்டிய தொகையிலும் பார்க்க ரூபா.75,000 ம் குறைவாக பிணை வைக்கப்பட்டிருந்தது.

**2.18 நிலைபேறுடனான அபிவிருத்தி**

2014 ஆம் ஆண்டு பெப்ருவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் 2017 ஆம் ஆண்டுக்காக மாவட்ட செயலகத்தின் செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருப்பினும், அதனை தயாரிக்கும்போது ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி

நிரலின் படி நிலைபேறுடனான அபிவிருத்தி நோக்கங்களை இலக்காகக் கொண்டிருக்கவில்லை.